இதயங்களின் இணைப்புக்கு இலக்கியம்

# அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய எட்டாம் மாநாடு-2014

# ஆய்வுக்கோவை

இஸ்லாமிய இலக்கியக் கழகம்

சென்னை

இஸ்லாமிய இலக்கியக் கழகம் நடத்திய
ஏழு அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகள்
மற்றும் மூன்று மாநில மாநாடுகளின் வெளிப்பாடுகளால்
முஸ்லிம் புலவர்கள் 2000க்கும் மேற்பட்ட இலக்கியங்களை
அடையாளப்படுத்தியிருக்கும் அரிய உண்மை
தமிழுலகுக்கு உணர்த்தப்பட்டது.

அரிய நூல்களை வெளிக்கொணர்ந்து
அரும்பணியாற்றியதோடு, இந்த மாநாடுகள்
அறிஞர்களையும், சக சமயச் சான்றோர்களையும்
ஊக்குவிக்கும் வகையில் விருதுகளும்,பொற்கிழிகளும்
வழங்கிக் கௌரவித்துள்ளன.

இஸ்லாமிய இலக்கியக் கழகம்தான் மதுரை காமராசர்
பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய ஆய்விருக்கையை
ஏற்படுத்தியது. அதைத் தொடர்ந்து, தமிழ் நாட்டில் உள்ள
எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் இஸ்லாமியத்
தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்றும் வகையில்
அறக்கட்டளைகள் நிறுவுதல் வேண்டும் என்ற திட்டப்படி,
தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், திருச்சி பாரதிதாசன்
பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம்,
புதுச்சேரி பல்கலைக்கழகம் ஆகியவற்றில்
அறக்கட்டளைச் சொற்பொழிவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
எஞ்சிய பல்கலைக்கழகங்களிலும் ஏற்பாடு செய்யப்படும்.

இம்மாநாடுகளால் சமய நல்லிணக்க உணர்வு
மலர்ந்திருக்கிறது. இலக்கியத்தால் மட்டுமே இதயங்களை
இணைக்க முடியும். அதனால்தான் **இதயங்களின்
இணைப்புக்கு இலக்கியம்** என்கிற புதிய முழக்கத்தோடு,
புதிய உணர்வோடு, இஸ்லாமிய இலக்கியக் கழகம்
செயல்படத் தொடங்கியுள்ளது.

# 88. 'இசைமணி' யூசுஃப்

நாஞ்சில் ப.ஜமால் முஹம்மத்

'இசைமணி' நாகூர் எம்.எம்.யூசுஃப் அவர்களை அறியாத இசை ஆர்வலர்கள் இருக்க முடியாது. இவர் தமிழகத்தின் ஆன்மீகத் திருத்தலமாம் நாகூரில் 1930-ஆம் ஆண்டு பிறந்து வளர்ந்தவர். கடந்த 45 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழகத்தின் தலைநகராம் சென்னையின் பல்லாவரத்தில் குடும்பத்தோடு வாழ்ந்து வருபவர்.

இளம் வயதிலேயே இசைமீது ஏற்பட்ட அளவிட முடியாத ஆர்வத்தால் பிரபல ஹிந்துஸ்தானி சங்கீத வித்துவான்களாகிய நன்னுமியான், சோட்டுமியான் வழிவந்தவரும் நாகூர் தர்கா ஆஸ்தான சங்கீத வித்துவானுமாகிய ஜனாப் எஸ்.எம்.ஏ.காதர் அவர்களிடம் குருகுல வாசம் செய்து, முறையாக சங்கீதம் கற்றுக் கொண்டவர். பின்னர் சென்னை வந்து தமிழிசைச் சங்கத்தின் இசை வகுப்பில் சேர்ந்து, இரண்டாண்டுகள் தமிழிசையைக் கற்று வாய்ப்பாட்டிலும் எழுத்துத் தேர்விலும் வென்று, 1958-ஆம் ஆண்டு தமது 28-ஆவது வயதில் 'இசைமணி' என்னும் பட்டம் பெற்றவர். இசைக் கல்லூரியில் 'இசைமணி' சீர்காழி கோவிந்தராசன் அவர்கள் இவருக்கு ஓராண்டு மூத்தவர். தமிழகத்திலேயே கர்நாடக இசைபயின்று 'இசைமணி' பட்டம் பெற்ற முஸ்லிம் இவர் ஒருவரே.

"ஆயகலைகள் அறுபத்து நான்கு" என அந்நாளிலேயே நமது முன்னார்கள் வகைப்படுத்தி, நெறிப்படுத்தி வைத்துள்ளனர். அந்த 64-ல் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கேட்கப்பட்டு, சுவைக்கப்பட்டு, பயிலப்பட்டு, மேம்படுத்தப்பட்டு இந்நாள் வரை அதன் ஈர்ப்புத் தன்மை சிறிதளவும் சிதையாமல் கொஞ்சமும் மாறாமல் மேன்மேலும் மெருகேற்றப் பட்டுவரும் ஒரே கலை 'இசை' தான் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர். பல பிரிவுகளும் பரிமாணங்களும் கொண்டது இசை. அதில் முக்கியமான அடிப்படை வடிவம்தான், 'கர்நாடக இசை' என்று இந்நாளில் குறிப்பிடப்படும் 'தமிழ் இசை'. இந்த இசைக்கென்று சில இலக்கண, இலக்கியங்களும் இருப்பதால் சாதாரண மக்களுக்கு அது சாத்தியப்படாது என்ற நிலை மாறி, முயன்றால் முடியும் என்று பின்னாளில் சிலர் நிரூபித்துக் காட்டியுள்ளனர். தமிழ் முஸ்லிம்களுக்கு சங்கீதம் வராது என்றிருந்த தவறான மன நிலையை மாற்றி, அதிலும் முஸ்லிம்கள் சாதிக்க முடியும் என்று காட்டியவர் 'இசைமணி' யூசுஃப்.

பின்னர் கேரளாவில் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த இசை வித்துவான் திரு. வாஞ்சீஸ்வர ஐயர் அவர்களிடம் கீர்த்தனங்கள் பலவற்றை முறையாகக் கற்றுக் கொண்டவர். மேலும் மேலும் இசையைக் கற்க வேண்டுமென்ற ஆர்வம் உள்ளவர்.

இளம் வயதிலேயே தாய்ச்சபையாம் முஸ்லிம் லீகில் தன்னை இணைத்துக் கொண்டு கண்ணியத்திற்குரிய காயிதெமில்லத், சிராஜுல் மில்லத், அ.கா.அ.அப்துல் சமது ஆகியோருடன் சென்று, அவர்கள் பங்குபெறும் அரசியல் மேடைகளிலும் பொது நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டு, இயக்கக் கொள்கை விளக்கப் பாடல்களையும் இஸ்லாமியப் பாடல்களையும் பாடி, அந்நாளைய நமது இளைய சமுதாயத்தினரைத் தமது

இசையால் ஈர்த்தவர். கீழக்கரை பிரமுகர்களின் இல்லத் திருமணங்களிலும் பிறந்தநாள் நிகழ்ச்சிகளிலும் அந்நாளில் அனேகம் கச்சேரிகள் செய்தவர்.

இவர் 'இசைமணி' பட்டம் பெற்ற ஒரு சில ஆண்டுகளுக்குப் பின்னர் நமது சமுதாயக் கவிஞர் சாரண பாஸ்கரனார் அவர்கள், "தம்பீ! நீங்கள் சங்கீதத்தில் 'இசைமணி' பட்டம் பெற்றீர்களே, இப்போது அதன் பயன் என்ன?" என்று கேட்டதும் அவருடைய கவிதை நூலை எடுத்துக் கொண்டு, கவிஞரையும் அழைத்துக் கொண்டு, நேராக HMV இசைத்தட்டு நிறுவனத்திற்குச் சென்று, அவரது ஒரு பாடலை மெட்டமைத்து, பின்னணி இசை சேர்த்து, இசைத்தட்டில் பதிவு செய்து, தான் கற்றதன் பலனைக் கவிஞருக்குக் காட்டினார். பாடலைக் கேட்ட கவிஞர், அவரை வெகுவாகப் பாராட்டினார். தமது நண்பர்களிடம் எல்லாம் இசைமணியைப் பற்றிச் சொல்லி மகிழ்ந்தார்.

அந்தப் பாடல்தான்...

**"மண்ணகத்தின் இகழ்வு மாற்றி விண்ணகத்தின் உயர்வுசாற்றி**
**பொன்னகத்தின் அண்ணல்நபி வந்தார் - புவி**
**தன்னகத்தின் சாந்தி இன்பம் தந்தார்!"**

என்று தொடங்குவது. இப்போதும் இதை வானொலியில் ஒலிபரப்பக் கேட்கலாம். அதைத் தொடர்ந்து HMV இசைத்தட்டுகளில் பல இஸ்லாமியப் பாடல்களைப் பாடியுள்ளார்.

சென்னை வானொலி நிலையத்தில் தேர்வு செய்யப்பட்ட பாடகராக இவர் பல ஆண்டுகள் பாடியுள்ளார். உமறுப் புலவர் அவர்களின் சீறாப்புராணப் பாடல்கள், குணங்குடி மஸ்தான் சாகிப் பாடல்கள், தக்கலை மெய்ஞ்ஞானி பீரப்பா பாடல்கள், கோட்டாறு ஞானியாரப்பா பாடல்கள், எந்தையின் தந்தையார் சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்களின் 'நபிகள் நாயக மான்மிய மஞ்சரி'ப் பாடல்கள் என சென்னை வானொலிக்காக இவர் பாடி ஒலிப்பதிவு செய்யப் பெற்ற பல இஸ்லாமியப் பாடல்கள் வானொலியின் வழிபாட்டு நிகழ்ச்சிகளில் இன்றும் ஒலிபரப்பாகி வருகின்றன. இவர் தனியாகப் பாடிய இசைத்தட்டு, ஒலிநாடா, நுண் ஒலிப்பேழைப் பாடல்களும் தமிழக, புதுவை, இலங்கை வானொலிகளில் இன்றும் ஒலிபரப்புச் செய்யப்படுகின்றன. தமிழ் முஸ்லிம் புலவர்கள் பலரையும் வானொலி வாயிலாக இளைய சமுதாயம் அறிந்து கொள்ளச் செய்ததில் இவருக்குப் பெரும் பங்குண்டு என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய வெளிநாடுகளிலும் இவர் இஸ்லாமிய இசைக் கச்சேரிகள் செய்துள்ளார். சிங்கப்பூர் வானொலியில் இவர் பாடிய பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பாகி வருகின்றன.

இவர் பாடும் பாடல்களில் பெரும்பாலானவை இவரால் மெட்டமைக்கப் பட்டவையாகவே இருக்கும். பாடல்களுக்குப் பின்னணி இசையும் இவரே அமைத்துக் கொள்வார். இதை கச்சேரி ஒத்திகையின் போது பலமுறை நானே நேரில் கண்டுள்ளேன். இதற்கு இவர் கற்ற 'இசைமணி' பட்டம் பெரிதும் கைகொடுத்தது. பாடல் கிடைத்த சில நிமிடங்களிலேயே அதற்கு மெட்டமைத்துப் பாடிவிடும் அபாரத் திறமை இவரிடம் இருந்ததைப் பலமுறை நானே கண்டு அதிசயித்துப் போயுள்ளேன்.

இவர் மெட்டமைத்த பாடல்களைக் கேட்ட இசை விற்பன்னர்கள் பலரும் இவரைப் பாராட்டியதை யெல்லாம் அவருக்குப் பாடல்கள் எழுதித் தருபவன் என்ற முறையில் உடனிருந்து கேட்டவன் நான். ஒருமுறை நானெழுதிய,

"இறைத்தூதர் எனவந்து இசுலாத்தின் நெறிதந்த
ஏந்தலெம் நபிநாதரே – உங்கள்
அறவோலை படித்தாலும் அன்புள்ளம் நினைத்தாலும்
அகமெல்லாம் இனிக்கின்றதே – எங்கள்
அகமெல்லாம் இனிக்கின்றதே...!"

என்று தொடங்கும் நபிநாதர் புகழ்பாடும் ஒரு பாடலை சென்னை வானொலியின் இசையமைப்பாளர் திரு.ஞானஸ்கந்தன் அவர்கள் கேட்டு வியந்து, "இதற்கு மெட்டமைத்தது யார்?" என்று கேட்டு, இசைமணி என்று தெரிந்ததும் அவரை வெகுவாகப் பாராட்டியது இன்றும் என் நினைவில் நிழலாடுகின்றது. சென்னை வானொலியின் இசை அமைப்பாளர்களாக இருந்த திருவாளர்கள் டி.ஆர். பாப்பா, எல்.கிருஷ்ணன், ஞானஸ்கந்தன், திருமதி ஜெயஸ்ரீ ஜெகன் போன்றோர் இவருக்கு நெருக்கமானவர்களுள் சிலர். மற்றும் வழுவூர் இராமையா பிள்ளை அவர்களின் மகனார் திரு.ஆர். மாணிக்கவிநாயகம், திரு.ரகு ஆகியோர் இசையிலும் இவர் பாடியுள்ளார். பிற சமய இசைவாணர்கள் பலரிடத்தும் இவர் அறிமுகமானவர். அதன் வாயிலாக நமது சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

காசிம் புலவர் அவர்கள் எழுதிய திருப்புகழ்ப் பாடல்களை விளக்க உரையுடன் பதிப்பித்து வெளியிட்ட மணவை முஸ்தஃபா அவர்கள், நூல் வெளியீட்டின்போது பாடுவதற்காக ஒரு பாடலைத் தேர்ந்தெடுத்து மெட்டமைக்க இசைப் பேரறிஞர் திரு.எஸ்.இராமநாதன் அவர்களிடம் இசைமணியை அனுப்பிய வேளையில், அந்தப் பாடலுக்கு தானே மெட்டமைத்து எடுத்துக் கொண்டு போய் இசைப்பேரறிஞரிடம் பாடிக் காட்டியபோது "இந்த மெட்டமைப்பே நன்றாக இருக்கிறது. இதை இப்படியே வைத்துக் கொள்ளலாம்" என்று அவரை வெகுவாகப் பாராட்டி, "உங்களுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் என்னிடம் வாருங்கள், எனக்குத் தெரிந்ததை உங்களுக்குக் கற்றுத் தருகிறேன்" என்று அன்பொழுகக் கூறியதைச் சொல்லும் போதெல்லாம் இவர் நெகிழ்ந்து போகின்றார். இவர் செய்துவந்த தொழில் அதற்கு நேரம் தரவில்லை என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

எத்தனையோ இஸ்லாமியப் பாடல்களை இவர் பாடியுள்ளார். அவை அத்தனையும் முத்துக்கள். எடுத்துக்காட்டுக்குச் சில :

"புகழனைத்தும் உனக்கே – இறைவா
புகழனைத்தும் உனக்கே!" (புலவர் ஆபிதீன்)

"தாமரை வட்டத்திலே...!" (கவிஞர் மூஸா)

"மனிதாபிமான மேதையாம் மன்னர் முஹம்மதே-இந்த
மாநிலம் உய்யத்தோன்றினார் நம் மகிபர் முஹம்மதே!"

[புலவர் ஆபிதீன்]

“இறைவன் மேல் ஆணை, இனத்தின்மேல் ஆணை,
இறைமறை மேல் ஆணை!” (புலவர் ஆபிதீன்)

“சேற்று மனத்தவர் நாட்டினிலே ஒரு
செந்தாமரை பிறந்தார் - உயர்
சிந்தனையிற் சிறந்தார்!” (கவிக்கோ அப்துல் ரஹ்மான்)

என்று ‘மோகனம்’ ராகத்தில் அமைந்த பாடலும்,

“கோரிக்கையைத் தந்தேன் அண்ணல் மீரா...!”

[கவிஞர் நாகூர் சலீம்]

“திக்குத் திகந்தமும்”........ என்னும் குணங்குடியார் பாடலைத் தொடர்ந்து “நினைப்பது நிறைவேறும் நாகூரிலே...!”

[கவிஞர் சாந்திதாசு]

“அருள்சேர் நபியின் அருந்தோழர், அவனி புகழும் அபுபக்கர்
அருமை மகளாய் வந்துதித்த அழகுப் பாவை ஆயிஷா...!”

[பேராசிரியர் எஸ்.எஸ்.அப்துல்லா]

“அல்லாவைத் தொழுதாலே எல்லாம் வரும், நல்ல யோகம்வரும்
நன்மை எந்நாளும் தேடிவரும்...!” (தென்காஞ்சி பாரதிசாமி)

மற்றும் என்னால் எழுதப்பட்ட,

“எங்கள் அண்ணல் நபிஇந்த மண்ணில் பிறந்துநல்
எண்ணங்கள் கொண்டு வந்தார்..”

என்று தொடங்கும் பாடலும்;

“வானத்து நிலவே, வண்ணத்து மலரே...”

என்னும் விருத்தத்தோடு தொடங்கி,

“அற்புதம், அற்புதம் உங்களின் சாதனை;
நற்பதம் தந்திடும் உங்களின் போதனை;
சற்குணம் யாவையும் கொண்டிடும் தாயகம்,
சந்ததம் நெஞ்சினில் நின்றிடும் நாயகம்...!”

என்று தொடரும் பாடலும்,

“திருநாகூர் குடிகொண்ட இறைநேசர் மீரா,
‘தன்’பயிர் வளர்க்கின்ற நபிநாதர் பேரா...!” என்ற பாடலும்,

“காயிதெ மில்லத் எங்கள் காவலரே!” என்றும் தொடங்கும் ‘மோகனம்’ ராகப்பாடலும்,
“செந்தமிழ்க் கவிபாடும் பெரும்பாவலர்!” என்று தொடங்கும் ‘சுருட்டி’ ராகப்பாடலும்,

"பெண்குலத்தின் வெண்ணிலவாம், பேருலகின் கண்மணியாம்,
அண்ணல்நபி திருமகளாம், அரும்பண்பின் பெருமகளாம்,
அன்புகுடி கொண்டிருக்கும் அருள்நிறையும், ஆரமுதாம்,
அன்னையெங்கள் கதீஜாவின் அன்புமலர் ஃபாத்திமுத்தாம்!"

என்ற பாடலும்,

"ஆடவரே, உங்கள் ஆடைகளாம் பெண்கள்
அடிமைகள் இல்லை"யென்றே
போதனை செய்துபெண் வேதனை தீர்ந்திட
பாதைகள் வந்ததும் யாராலே – எங்கள்
பெருமான் நபியிற சூலாலே!"

என்று தொடங்கும் பாடலும்,

"கன்ஜஸவாய் எங்கள் காதிரொலி மீரா
கருணை மழையதனைக் காணீரோ,
சஞ்சலம் தீர்த்துவைக்கும் தலம் அல்லவோ இது
சான்றோர் புகழ்ந்துரைக்கும் சபைஅல்லவோ!"

என்று தொடங்கும் "தேஷ்" ராகப் பாடலும்,

"நாகூர் நகராளும் ஷாகுல்ஹமீ தரசே,
நாடிடு வார்க்கருளும் நம்பிக்கையின் முரசே!"

என்று தொடங்கும் 'ஆரபி' ராகப் பாடலும்,

"பெருமான் நபிகள் திருவாய் மலர்ந்தால்
தேனினும் சுவை இருக்கும் – எங்கள்
திருமான் நபிகள் தெருவில் நடந்தால்
மேகங்கள் குடைபிடிக்கும்–கார்
மேகங்கள் குடைபிடிக்கும்!"

என்று தொடங்கும் 'சுத்ததன்யாசி' ராகப் பாடலும்,

"மாணிக்கப்பூர் பிறந்த மன்னவர் ஷாஹெ மீரா
மகிமையெலாம் சொல்ல வாருங்களே;
காணிக்கையாய் எனது கவிதையில் நான்பாடி
கண்ணியம் பெறவேண்டும் திருச்சபையில் – நாகூர்
திருச்சபையில்...!"

என்ற பல்லவியுடன் தொடங்கும் 'கல்யாணி' ராகப் பாடலும், இவை போன்ற இன்னும் பல பாடல்களும் மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும் பாடல்களுள் சிலவாகும்.

மெல்லிசைக் குயில் பி.சுசீலாவோடு இசைத்தட்டிலும், திருமதி வாணி ஜெயராமோடும், திரு.டி.எம்.சௌந்திரராசனோடும் திரைப் படங்களிலும் இசைமணி யூசுஃப் அவர்கள் பாடியுள்ளார்கள்.

ஏறத்தாழ இருபது ஆண்டுகள் சென்னைத் தொலைக்காட்சியில் இஸ்லாமியப் பண்டிகைகளின் போதெல்லாம் சிறப்பு மெல்லிசை நிகழ்ச்சிகளில் எனது பாடல்களை அரங்கேற்றம் செய்த பெருமைக்குரியவர். சென்னை வானொலியிலும் எனது பாடல்களைப் பதிவு செய்துள்ளவர் இசைமணி அவர்கள்.

கர்நாடக சங்கீதத்தில் முழுநேரக் கச்சேரி செய்யுமளவுக்குப் பயிற்சி பெற்ற திறமையாளர். இவரது கர்நாடக இசைக் கச்சேரிகளை சென்னை வாணி மகாலிலும், கோகலே மண்டபத்திலும், நாகூர் தர்காவின் உள் மண்டபத்திலும் நான் கேட்டிருக்கிறேன். வாணி மகால் கச்சேரியின்போது இசைமணி சீர்காழி கோவிந்தராசன் அவர்கள் நேரில் வர இயலாத சூழ்நிலையில் அவரது மகனார் இசைமணி சீர்காழி சிவசிதம்பரத்தை அனுப்பி வைத்து இவரைப் பாராட்டினார். கோகலே மண்டபத்தில் நடந்த கச்சேரியின் போது இசைமணி சீர்காழி கோவிந்தராசன் அவர்களே நேரில் வந்திருந்து இவரை வாழ்த்திப் பெருமைப்படுத்தினார். நாகூர் தர்கா மண்டபத்தினுள் நடந்த கச்சேரிகளில் இவரது குருவும் நாகூர் தர்கா சங்கீத வித்துவானுமாகிய ஜனாப் எஸ்.எம்.ஏ. காதர் அவர்கள் பாடியதோடல்லாமல், தமது சீடர் இசைமணி யூசுஃப் அவர்களையும் அதிக நேரம் பாடவைத்து ரசித்துப் பாராட்டினார். கர்நாடக இசைக் கச்சேரிகளில் இவர் பாடும் கீர்த்தனங்களில் சிலவற்றை நானும் எழுதியிருக்கின்றேன். அதில் ஒன்றுதான் மாணிக்கப்பூர் பிறந்த மன்னவர் ஷாஹெமீரா மகிமையெல்லாம் சொல்ல வாருங்களே...!" என்ற பாடல். அந்தப் பாடலுக்கு "கல்யாணி" ராகத்தை ஆலாபனை செய்து, சரணத்தில் நிரவல் செய்து, கல்பனா ஸ்வரம் பாடி சபையோரை வியக்க வைத்தபோது நானும் அங்கிருந்து கேட்டேன். இவரது பாடல்களில் ஆங்காங்கே வந்து விழும் சங்கதிகள் நம்மை சந்தோஷப்படுத்தும், கமகங்கள் நம்மைக் களிப்பிலாழ்த்தும். சங்கீத மும்மூர்த்திகளான தியாகராஜ சுவாமிகள், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் மற்றும் ஸ்வாதித் திருநாள் கீர்த்தனைகளிலும் இவருக்குப் பாடாந்திரம் உண்டு. பதம்பாடும் இவர், தனது வளமான குரலுக்கு மேலும், இதம்சேர்க்கும் வகையில் அடிக்கடி சாதகம் செய்வதை வழக்கமாகக் கொண்டவர்.

1967ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது அறிஞர் அண்ணா, கண்ணியத்திற்குரிய காயிதெ மில்லத் ஆகியோர் பங்குகொண்ட ஓர் அரசியல் பொதுமேடையில் 'காயிதெ மில்லத்' பற்றி நானெழுதியிருந்த,

"காயிதெ மில்லத் எங்கள் காவலரே-அவர்
கருணையின் வடிவான 'தீன்' சுடரே;
வாயினிக்கப் பேசிவரும் வல்லவரே-எங்கள்
வாழ்வுக்கு வழிதந்த நல்லவரே...!"

என்னும் பல்லவியுடன் தொடங்கும் பாடலுக்கு இவர் மெட்டமைத்துப் பாடியதைக் கேட்ட அறிஞர் அண்ணா அவர்கள், பாடலையும் அவர் பாடிய நயத்தையும், பாடலின் பொருளையும் வெகுவாகப் பாராட்டிப் பேசியதை மறக்க முடியாத நிகழ்வாக அவர் கருதுகின்றார். இது என்னாலும் மறக்க முடியாததே.

"வையத்தின் மணிவிளக்கே, வல்லோனின் நல்லருளே-அன்பே என்றன்
ஐயத்திற் அறிவொளியே...!"

என்று தொடங்கும் இலங்கைக் கவிஞர் புரட்சிக் கமால் அவர்களின் விருத்தப் பாக்களுக்கு ராகமாலிகையில் இவர் மெட்டமைத்துப் பாடியதைக் கேட்ட சிராஜுல் மில்லத் கண்களில் நீர் கசிந்ததை நண்பர் மூலம் தெரிந்து கொண்டு நெகிழ்ந்தவர். இந்தப் பாடலை தி.மு.க. மாநாடொன்றில் பாடி, கழக முன்னணியினரின் பெருத்த பாராட்டுதல்களையும் பெற்றவர். ஒலி நாடாவிலும் இது பதிவாகியுள்ளது. கீழக்கரை பெரியவர் 'தைக்காவாப்பா' அவர்கள் இவரைக் காணும் போதெல்லாம் அதைப் பாடச் சொல்லிக் கேட்பார்களாம்.

யாப்பிலக்கண விதிகளோடு இசை இலக்கண முறைகளும் சேர்ந்து யாப்பும் இசையும் இணைந்தும் தழுவியும் இங்கித நடைபோடும் இனிய பாடல்கள்தான் 'திருப்புகழ்'. திருப்புகழ் பாடுவதற்கு எவ்வளவு கடினமானது என்பதைப் பாடலைக் கேட்கும்போது நம்மால் அறிய முடியும். திரு.டி.எம்.எஸ். அவர்கள் ஒரு திரைப்படத்தில் அருணகிரி நாதரின் திருப்புகழ்ப் பாடலான,

"முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்துத்தொரு வித்துக் குருபர – எனவோதும் ...!"

என்று பாடும்போது அதைக் கேட்கையில் சொற்களின் அழுத்தமும் கடினமும் நம்மை வியப்பிலாழ்த்தும்.

நமது இஸ்லாமியப் புலவரான காசிம் புலவர். பாடியிருக்கும் திருப்புகழை நம்மில் எத்தனைபேர் படித்திருப்பார்கள்?

"கவிதை, இசை இரண்டும் இணைந்தாடும்-பக்தி
கலந்தசுவை அதிலே வழிந்தோடும்!"

என்று காசிம்புலவர் திருப்புகழைப் பற்றி நானெழுதிய வரிகள் இப்போது என் நினைவுக்கு வருகின்றன. காசிம்புலவர் அவர்கள் பாடிய திருப்புகழின் சில பாடல்களை நமது இசைமணி யூசூஃப் அவர்கள் பாடுவார்கள்.

"பகரு முருவிலி யருவிலி வெருவிலி
சிறிது மொருதலை பயிலிலி துயிலிலி
பருவி னுணர்விலி துணையிலி இணையிலி-விரிவான...!"

என்று தொடங்கும் இந்தப் பாடலை 'பொங்குதமிழ்ப் பண்ணிசை மன்ற ஆண்டு விழாவின்போது 'ராகமாலிகை'யில் மெட்டமைத்துப் பாடியதைக் கேட்டவர்கள் இவரைப் பாராட்டியுள்ளனர். தொடர்ந்து நான்காண்டுகள் அந்த மன்ற விழாக்களின் போது பல இஸ்லாமியப் புலவர்களின் பாடல்களையும் பாடியுள்ளார். அவை ஒலிப்பதிவு செய்யப்பட்டு தனியார் தொலைக்காட்சி யொன்றில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது. "பொங்கு தமிழ்ப் பண்ணிசை மன்றம்" டெல்லியில் நடத்திய விழாவிலும் பல இஸ்லாமியப் பாடல்களோடு காசிம் புலவரின் இந்தத் திருப்புகழ்ப் பாடலை ராகமாலிகையில் பாடிய இசைமணியை மருத்துவர் ஐயா, "சிலரிடம் இசை இருக்கிறது; சிலரிடம் பாடல் இருக்கிறது. ஆனால் அவை இரண்டும் உங்களிடம் இருக்கிறது" என்று சொல்லி வெகுவாகப்

பாராட்டியதை என்னிடம் சொல்லியுள்ளார். சுருதியும் லயமும் இணைய இவர் கீர்த்தனங்களை இசைக்கும்போது அது செவிகளுக்கு நல்விருந்து.

ஆஸ்கர் நாயகன் இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மானோடு நெருங்கிய தொடர்புடையவர். ரஹ்மான் அவர்கள் 'தீன் இசைமாலை' ஒலிநாடா செய்ய முனைந்த வேளையில் பாடல்கள் எழுதுவதற்கென்று என்னைப் பரிந்துரை செய்தவர் இசைமணி யூசுஃப் அவர்கள்தான். சிங்கப்பூர், மலேசியா கச்சேரிகளுக்குச் சென்று ஊர் திரும்பியிருந்த நேரத்தில் என்ன காரணத்தினாலோ குரலில் தகராறு ஏற்பட்டு பாடமுடியாதிருந்த அந்த நேரத்தில்தான் 'தீன் இசைமாலை ஒலிப்பதிவு நடந்தது. இசைமணி பாடமுடியா திருந்ததால் நண்பர் சாகுல் அமீதுக்கு ரஹ்மானிடம் நான் பரிந்துரை செய்து வாய்ப்பு வாங்கித் தந்தபோது பத்துப் பாடல்களில் நான்கு பாடல்களை அவரைப் பாடவைத்தார்; திரைப்படங்களிலும் பின்னர் சாகுல் அமீதைப் பாட வைத்தார்.

பாட முடியாதிருந்த இசைமணியை ரஹ்மானின் தாயார் மருத்துவர்களிடமும் இறைநேசச் செல்வர்களின் தர்காக்களுக்கும் அழைத்துச் சென்று அவரது குரலைச் சரிசெய்து மீண்டும் பாட வைத்ததை மறக்க முடியாது. செங்கை நெமிலியில் ரஹ்மான் குடும்பத்தவர் நிர்வகித்து வந்த ஹஸரத் முஹம்மது ஷா காதிரியார் தர்கா உருஸின்போது நானெழுதிய,

"செங்கை நெமிலியிலே ஒரு பெரியார் - அவா
சங்கைமிகும் முஹம்மது ஷா காதிரியார்!"

என்னும் பல்லவியுடன் தொடங்கும் ஒரு பாடலை கடற்கரை மணலில் அமர்ந்து ரஹ்மான் Key board வாசிக்க இசைமணி பாடினார். அன்று நானும் அவர்களுடன் இருந்தேன். பின்னர் அந்தப் பாடலை இசைமணியோடு ரஹ்மான் குடும்பத்தவர் அனைவரும் சேர்ந்து பாட, ரஹ்மானின் ஒலிப்பதிவுக் கூடத்தில் பாடல் பதிவு செய்யப்பட்டது. இசைமணியிடம் ரஹ்மான் அன்பு கலந்த மரியாதை வைத்திருந்தார். ரஹ்மானின் முதல் திரைப்படமான 'ரோஜா' படப்பாடல்களை அவருடைய வீட்டில் வைத்து முதன்முதலில் கேட்ட இசைமணியும் நானும் அவரது இசைத்திறமையை அறிந்து வியந்து போனோம். அவரை வெகுவாகப் பாராட்டினோம். "உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது; இறையருளால் திரை உலகின் மிக உயர்ந்த இடத்தில் நீங்கள் வருவீர்கள்" என்றும் உள்ளம் திறந்து வாழ்த்தினோம். அது பின்னாளில் பலித்தது. ஒன்றுக்கு இரண்டாக அவர் ஆஸ்கார் விருதுகளைப் பெற்று அமெரிக்காவின் லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் மிகப் பிரமாண்டமான அரங்கத்தின் நின்று "எல்லாப் புகழும் இறைவனுக்கே!" என்று முழங்கித் தமிழைப் பெருமைப் படுத்தினார்; இஸ்லாத்திற்கும் பெருமை சேர்த்தார்.

இஸ்லாமிய இளைஞர்கள் பலருடைய பாடல்களைக் கேட்கும் போதெல்லாம், "இவர்களுக்கு நல்ல வளமான குரல் இருக்கிறது; இசையைக் கற்றுக் கொண்டு அவர்கள் பாடினால் பாடல்கள் இன்னும் மெருகேறும்" என்று தன்னுடைய எண்ணத்தை வெளிப்படுத்துவார் இசைமணி யூசுஃப்.

சென்னைத் தலைமைச் செயலகத்தின் 'மனமகிழ் மன்றம்' சார்பாக நடத்திய ஒரு கச்சேரியில் இசைமணியைப் பாராட்டி, "ஏழிசைச் செல்வர்" என்னும் விருதினை அளித்துக் கௌரவித்தனர்.

இசைமணி நாகூர் எம்.எம்.யூசுஃப் அவர்களுக்கு 45 ஆண்டுகளுக்கும் மேலாக நான் பாடல்கள் எழுதி வருகின்றேன். அவர் பாடும் பாடல்களில் பெரும்பாலானவை என்னால் எழுதப்பட்டவை என்பதை அடக்கத்தோடு இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். இசைமணி அவர்கள் முழுநேரப் பாடகராக ஆகி இருந்தால் தமிழக முஸ்லிம்களின் இசைப்பாடல் மரபுகளுக்கு இன்னும் பெருமை சேர்த்திருப்பார். ஆனால் அவரது குடும்பச் சூழ்நிலை அவரை வேறு தொழிலுக்கு இழுத்துச் சென்று விட்டது.

இந்நாளில் உடல்நிலையின் காரணமாக வெளியில் எங்கும் செல்ல இயலாத நிலையிலும் “இசை இல்லம்” என்னும் பெயர் கொண்ட தன்னுடைய வீட்டில் இன்றும் பாடிக் கொண்டே இருக்கின்றார் என்பதை நானறிவேன். இசையாகவே அவர் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

எள்ளளவேனும் கள்ளம், கபடம் இல்லாத வெள்ளை உள்ளங்கொண்ட, மனிதநேயம் நிறைந்த நல்லவர் இசைமணி யூசுஃப் அவர்கள். இதனால் பிறசமயத்தவரும் இவரைப் பெரிதும் மதித்து அன்பு பாராட்டுகின்றனர். அவரிடம் இருக்கும் நல்ல உள்ளத்தால்தான் எங்கள் இருவரின் நட்பு 50 ஆண்டுகளுக்கும் மேலாக இன்றும் நீடிக்கிறது. இசை வழிப்பாக்களால் இஸ்லாத்தைப் பெருமைப்படுத்திய இவரைத் தகுந்த முறையில் கௌரவிக்க சமுதாயம் இனிமேலாவது முன்வருமா?

**இசைமணியைக் கொண்டாடுவோம் - அவர்**
**இசை பரவப் பண்பாடுவோம்!**
**எல்லாப் புகழும் இறைவனுக்கே!**